Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 11
வியாழக்கிழமை
07 டிசெம்பர் 2023
கார்த்திகை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"அப்ப திரும்ப எப்ப சண்டை தொடங்கும் எண்டு தான் உவையள் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருக்கினம் போல"

போர் ஏற்பட்டால்

# தமிழ் எம்.பி.க்களை தப்ப விடமாட்டோம்!

வன்மத்தைக் கக்கும் வீரசேகர



**கொழும்பு, டிசெம்பர் 7**

**நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்பட்டால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளிநாடு தப்பிச்செல்லவும் விடமாட்டோம் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.** 11

## 'எட்கா' உடன்பாடு மார்ச்சில் இறுதி!

கொழும்பு, டிசெ.7

உத்தேச இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கான ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவு செய்ய இருதரப்பு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள இந்திய - இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கான ஒப்பந்தத்தின் (எட்கா) 12 ஆவது சுற்றுக் கலந்துரையாடல் கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் 11

## நாடாளுமன்ற அமர்வை நிறுத்த ரணில் திட்டம்?



கொழும்பு, டிசெ.7

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் நாடாளுமன்ற அமர்வுகளை ஒரு மாதம் இடைநிறுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற அமர்வுகளை இரண்டு மாதங்கள் வரையில் இடைநிறுத்த முடியும். அவ்வாறு செய்தால் ஜனாதிபதி மீண்டும் நாடாளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து சிம்மாசன உரையை ஆற்ற வேண்டும் என்பதுடன், கோப் 11

## வற் உயரும்

கொழும்பு, டிசெ.7

பெறுமதி சேர் வரியை (வற்) 18 சதவீதமாக அதிகரிப்பதற்கு அரசாங்க நிதி பற்றிய குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

திருத்தங்களுக்கு உட்பட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

குழந்தைகள் போஷாக்கு உணவுகள், மருத்துவ உபகரணங்கள், உரங்கள் ஆகியவற்றுக்கான வற்வரியை இரத்துச் செய்ய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## சிங்கள மக்களை ஆள முயலவில்லை புலிகள்

சார்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.7

சிங்கள மக்களை ஆளவேண்டும், பௌத்தத்தை ஆள வேண்டும் என்ற சிந்தனை புலிகளிடம் இருந்ததில்லை. அதற்கான நடவடிக்கையிலும் அவர்கள் இறங்கவும் இல்லை. தங்களுடைய நிலத்தில் இன, மொழி, கலாசார அடையாளங்களுடன் வாழவேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாக இருந்தது. எமது கோரிக்கையும் அதுதான் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித் 11

## தமிழக மீனவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.7

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 14 பேரும் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-எ-27-100)

## சிறுமி துஷ்பிரயோகம் முல்லையில் தந்தை கைது

முல்லைத்தீவு, டிசெ.7

9 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்துள்ளது. 11

அரசகடமைக்கு இடையூறு

## நால்வர் மீது முறைப்பாடு

கொழும்பு, டிசெ.7

அரச கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்து நால்வருக்கு எதிராக வலி.மேற்குப் பிரதேசசபை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளது.

வலி.மேற்குப் பிரதேசசபை பொதுச் சந்தையின் வியாபாரிகள் இருப்பிடப் பதிவுக்காக பிரதேசசபையின் வருமான பரிசோதகர், மேற்பார்வையாளர், அலுவலக 11



## தெல்லிப்பழை வாள்வெட்டு மூவர் கைது; வாகனமும் மீட்பு!

யாழ்ப்பாணம், டிசெ.7

தெல்லிப்பழையில் கடந்த திங்கட்கிழமை நடந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதலுக்குப் பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் வள்ளிபுனம், முத்துஐயன்கட்டு, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் 3 பேர் தேடப்பட்டு வருகின்றனர் எனவும் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழையில் ஹை-ஏஸ் வாகனம் ஒன்றில் வந்த கும்பல் வீதியில் 11

## வன்முறைகளுக்கு இனி இடமில்லை!

மஞ்சுள சென்ரத் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.7

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை. பொதுமக்களின் அமைதிக்குப் பங்கம் விளைப்போர் கைது செய்யப்படுவார்கள் என்று யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள சென்ரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட் 11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயங்கரவாதத் தடைச்சட்டம்

# வாக்குறுதிகளுக்குப் புறம்பாக பயன்படுத்துகிறது இலங்கை

## பிரிட்டன் அமைச்சர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 7**

**சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துகின்றது என பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சர்களில் ஒருவரான லியோ டொச்செட்ரி தெரிவித்துள்ளார்.**

பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து பிரிட்டிஸ் அரசாங்கம் உன்னிப்பாக அவதானிக்கின்றது. குறிப்பாகத் தமிழர்களின் நிலைமை குறித்து அங்கு காணப்படும் நிலைவரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனதை வருத்தும் வலுவான விதத்தில் இங்கு முன்வைத்தார்கள்.

மனித உரிமைகள் விடயத்தில் பிரிட்டனின் கரிசனைக்குரிய 32 நாடுகளில் ஒன்று இலங்கை பல விடயங்கள் தொடர்பில் நாங்கள் கரிசனை செலுத்துகின்றோம். இலங்கையில் பல வருடகாலமாகக் காணப்படும் இன, மத பதற்றங்களைத் தொடர்ந்து தமிழ்ச் சமூகத்தினர் புறக்கணிக்கப்படுவது - ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவது எங்கள் அனைவருக்கும் தெரியும் -

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச தரத்திலான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் நீண்டகாலமாக வாக்குறுதியளித்து வருகின்றபோதிலும் பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. கடந்த வாரமும் பயன்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் - என்றார். (ம)

# ராஜபக்சக்கள் மீது இழப்பீட்டு வழக்கு!

### நுகர்வோர் சங்கம் ஏற்பாடு

கொழும்பு, டிசெ,7

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோரே பொறுப்பு. உச்ச நீதிமன்றம் விதித்த தீர்ப்பின்படி, அகில இலங்கை நுகர்வோர் சங்கம் இழப்பீடு கோரி வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளது.

இந்த விடயத்தை அகில இலங்கை நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் மிலிந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

நாட்டில் எரிவாயு விபத்தால் பத்துக்கும் மேற்பட்ட மனித மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இன்றும் அரசாங்கம் அதற்கு நீதி வழங்கவில்லை. எரிவாயு வெடிப்பு உட்பட பல்வேறு துறைகளில் பல பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெற்றுள்ளன. மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் எவையும் பயனளிக்கவில்லை என்றும் மிலிந்த பிரேமரத்ன மேலும் தெரிவித்தார். (ச-இ)

# வீதி விபத்து இழப்பீடு; புதியசட்டம்விரைவில்

கொழும்பு, டிசெ. 7

வீதி விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்துக்குச் செல்லாமல் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

ஒரு மாத காலத்துக்குள் இந்தச் சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

இதற்கான விதிமுறைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.

விபத்தின் தன்மைக்கு ஏற்ப பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு போதாதெனில் நீதிமன்றை நாடலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# நாலக விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 7

முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவுக்கு எதிரான வழக்கில் இருந்து அவரை விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பல முக்கியமான பிரமுகர்களை கொல்லச் சதிசெய்ததாக 2019இல் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

குறித்த வழக்குத் தொடர்பில் நாலக சில்வாவுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் நீதிமன்றில் நேற்று அறிவித்தார். இதையடுத்தே அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். (ம)

# நாயைக் காப்பாற்றுவதற்கு உயிரை விட்ட மூதாட்டி!

கொழும்பு, டிசெ. 7

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு பெண்ணொருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வெல்லவ பகுதியில் இடம்பெற்றது.

119 என்ற தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் வெல்லவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வளர்ப்பு நாயை ரயிலில் அடிபடாமல் காப்பாற்றுவதற்கு முனைந்தே அந்த மூதாட்டி ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம)

# பாலியல் இலஞ்சம் கோரிய பொலிஸ் அலுவலர் கைது!

கொழும்பு, டிசெ. 7

கல்முனை தலைமையகப் பொலிஸில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பாலியல் இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய போது, அவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

# கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 59ஆவது நினைவு நிகழ்வு!



யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவாளர் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 59ஆவது நினைவு தின நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் உபதலைவர் க.மகாதேவன் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்துகொண்டு நினைவுப் பேருரை ஆற்றினார் (ரி-27-17)

# நுண்நிதி நிறுவனங்கள் கண்காணிக்கச் சட்டம்

கொழும்பு, டிசெ. 7

நுண்நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கும் வகையில் புதிய சட்டவரைவொன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நுண்நிதி நிறுவனங்கள் நாட்டுக்கு புற்றுநோயாக மாறியுள்ளது. மத்திய வங்கியின் ஊடாக அன்றி தனியான நிறுவனமொன்றை ஸ்தாபித்து நுண்நிதி நிறுவனங்களை கண்காணிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# வலுவிழந்தது 'மிக்ஜான்'

கொழும்பு, டிசெ. 7

வங்காள விரிகுடாவின் மேற்குப் பகுதியின் மத்தியில் நிலைகொண்டிருந்த மிக்ஜான் சூறாவளியானது இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தின் கரையை ஊடறுத்துள்ளதுடன் படிப்படியாக வலுவிழந்துள்ளது என்று வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் கடற்பிராந்தியங்கள் மிக்ஜானின் பாதிப்பில் இருந்து விடுபட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் ஊதியம்; இவ்வருடம் தீர்வில்லை

## கல்வி அமைச்சர் திட்டவட்டம்

**கொழும்பு, டிசெ. 7**

**அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா அதிகரிப்புச் செய்துள்ளதால் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு உடனடியாகத் தீர்வு காண்பது சாத்தியப்படாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபாவை வழங்குவதாக வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர்.

அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிப்பை வழங்குவதற்கு 30 பில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது. இலவச பாடநூல் வழங்குவதற்காக 15 பில்லியன் ரூபா, பகல் உணவுக்காக 16 பில்லியன் ரூபா, மாணவர்களுக்கு பாதணிகள் வழங்குவதற்காக 2.5 பில்லியன் ரூபா ஆகியவற்றுக்கும் நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. அதனால் இந்த வருடத்தில் ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்க முடியாது. அடுத்த வருடம் முதல் நாம் கட்டம் கட்டமாக சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவோம் - என்றார். (ம)

## காலணிகளுக்காக ரூ.22 கோடி செலவு

கொழும்பு, டிசெ. 7

நாட்டில் மாணவர்கள், பிக்குகள், கன்னியாஸ்திரிகள் ஆகியோருக்கு 3 ஆயிரம் ரூபா பெறுமதியான காலணி வவுச்சர்களை வழங்க கல்வி அமைச்சு 2 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் பதிவு செய்யப்பட்ட கடைகளில் காலணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பரீட்சைப் பெறுபேறால் மாணவி உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறத் தவறியதாக பெற்றோர் கண்டித்தமையால் மாணவி ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஒ-20)

## மாணவர் விலகல்; நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 7

பொருளாதாரப் பாதிப்பால் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வியிலிருந்து மாணவர்கள் குறிப்பாக ஆண் மாணவர்கள் இடைவிலகும் வீதம் அதிகரித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் பல்வேறு காரணிகளால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## குவேனியின் குடம் தேடியோர் கைது!

கொழும்பு, டிசெ. 7

கற்பிட்டி நுரைச்சோலையிலுள்ள தோட்டமொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தோட்டத்தின் காவலாளி உட்பட புதையல் தோண்டுவதற்கு உதவிய கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குவேனி பாவித்ததாகக் கூறப்படும் செம்பு வகையைச் சேர்ந்த குடம் ஒன்று இந்தத் தோட்டத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத் தேடியே புதையல் தோண்டியதாகவும் பொலிஸ் விசாரணையில் சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## கலப்பைக்குள் சிக்கிய சிறுவன் உயிரிழப்பு!

வவுனியா, டிசெ. 7

நெடுங்கேணிப் பிரதேசத்தில் வீட்டின் உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்ட சிறுவன் சிகிச்சை பயனளிக்காமல் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்தான். பனையாண்டான் நெடுங்கேணியைச் சேர்ந்த சிவலோகநாதன் விந்துஜன் (வயது - 4) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவான்.

கடந்த மாதம் 21ஆம் திகதி வீட்டுக்காணியை உழவு செய்து கொண்டிருந்த போது உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிறுவன் சிக்குப்பட்டுள்ளான்.

காயமடைந்த சிறுவன் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்துள்ளான். [illegible]

## பட்சி தினம் தெரியுமோ?

அடுத்தவன் எங்கட மூஞ்சையில காறித்துப்பினாலும் அதைப்பற்றி அக்கறையே இல்லாமல், 'நாங்கள் பரந்த மனதுள்ள ஆக்கள்' எண்டு அடுத்தவைக்கு நல்லபிள்ளையா நடிக்கிறதில தமிழர் எல்லாருமே கெட்டிக்காரர். அதிலையும் எங்கட அரசாங்க அதிகாரிமார் இந்த விசயத்தில கடும் விண்ணர்.

ஒரே பீடிகையோட இழுத்தடிக்காமல் விசயத்துக்கு வருவம். வடமாகாணப் பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சியில நேற்று நடந்தது. புத்தகக் கண்காட்சி, முதுசொம்களின் காட்சி, பாரம்பரிய ஆற்றுகைகள், மாற்றுத்திறனாளிகளின் நிகழ்ச்சிகள் எண்டு நல்ல நல்ல விசயங்கள் எல்லாம் பண்பாட்டுப் பெருவிழாவிலா நடந்திச்சுது. ஆனால் எல்லாத்துக்கும் நாவூறு கழிக்கிற மாதிரியும் ஒரு நிகழ்ச்சியை மேடையேத்தினதுதான் சனத்துக்கு கடுப்பாப் போட்டுது. வடமாகாணப் பண்பாட்டில ஒரு அம்சம் எண்டு சொல்லி, கண்டியன் டான்ஸ் ஒண்டையும் நேற்றைய விழாவை ஏற்பாடு செய்தவை மேடையேத்தினவை. அதுதான் சனத்தை கோபப்படவைச்ச அந்த நிகழ்ச்சி. வவுனியாவில உள்ள சிங்கள ஆக்கள் தான் இந்தக் கண்டியன் டான்ஸை ஆடியிருக்கினம்.

வடக்கில எத்தினையோ நல்ல கலைஞர்மார் தங்கட திறமைக்கு ஒரு மேடை கிடைக்காதோ எண்டு ஏங்கிக் கொண்டிருக்கேக்க, எங்கையோ இருந்து கண்டியன் டான்ஸை எங்கட பண்பாட்டுப் பெருவிழாவில மேடையேத்தவேண்டிய அவசியமில்லையே. இவ்வளவு நாளும் பண்பாட்டுப் பெருவிழா நடக்குதுதான், ஆனால் இப்பிடியொரு கூத்து நடக்கேலையே. அப்பிடியெண்டால் வடக்கு மாகாணப் பண்பாட்டில கண்டிய நடனமும் ஒண்டு எண்டு எங்கட கலாசார உத்தியோகத்தர்மாரெல்லாம் ஏற்றுக்கொள்ளுகினமோ? சிலவேளை எங்கட வடக்கில வந்திருக்கிற சிங்கள ஆக்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் குடுப்பம் எண்டு ஆரும் அரைகுறை நல்லிணக்க கலாசார உத்தியோகத்தர்மார் நினைச்சு இப்பிடி கண்டியன் டான்ஸை நடத்த இடம் குடுத்திருக்கலாம். ஆனால் இப்பிடித்தான் எல்லாத்துக்கும் இரக்கம் பார்த்து இடம் குடுத்து, கடைசியில கூடாரத்துக்க ஒட்டகம் புகுந்த மாதிரி எல்லாத்தையும் இழந்திட்டு நிக்கிறம். இப்பிடியே விட்டமெண்டால் இந்தமுறை மேடையில நடந்த கண்டியன் டான்ஸ், அடுத்தமுறை நிகழ்ச்சி தொடங்கேக்க நடக்கும். பிறகு மேடையிலையும் ஒரே சிங்கள நிகழ்ச்சி மயமா மாறும். பிச்சை போடுறமாதிரி ஏதும் சின்னச்சின்ன தமிழ் நிகழ்ச்சியளுக்கு இடம் குடுத்து கடைசியில அதுகும் இல்லாமல் போகும். மெல்லத் தமிழ் இனிச் சாகிறதுக்கு வெளியில இருந்து ஒருத்தரும் வரத்தேவையில்லை, எங்கட ஆக்களே காணும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத்திறனாளர் தினம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

புலர் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள்தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வலி.மேற்குப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து புலர் அறக்கட்டளையின் நன்கொடையாளர்களின் பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட நுளம்பு வலைகள், போர்வைகள், மழைக் கவசங்கள் என்பனவும் கையளிக்கப்பட்டன. (ச-125)

## மக்களை வாட்டும் விலைவாசி உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 7

மரக்கறி மற்றும் கடலுணவுகளின் விலைகள் அதிகரிப்பால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொருளாதாரம் நலிவுற்ற மக்களின் உணவாகக் காணப்படும் கத்தரிக்காய், மரவள்ளி, பயிற்றங்காய் உள்ளிட்ட மரக்கறி வகைகள் கிலோ 500 ரூபாவைத் தாண்டியுள்ளன. பச்சைமிளகாய் கிலோ ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது. இதனால் பொருண்மியத்தில் நலிவடைந்த மக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டிவரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

## புதிய பாலம் பாவனைக்கு!

வவுனியா, டிசெ. 7

நொச்சிமோட்டையில் புதிய பாலம் அமைக்கப்பட்டு மக்களின் போக்குவரத்து முழுமையாகச் சீர்செய்யப்பட்டுள்ளது.

மழைகாலங்களில் நொச்சிமோட்டை மகாகச்சக்கொடி, மாமடு மற்றும் கள்ளிக்குளம் கிராமங்களை இணைக்கின்ற பிரதான வீதியின் இடைப்பட்ட பிரதேசத்தில் நொச்சிமோட்டை குளவான் வெள்ளநீர் குறுக்கறுத்துப் பாயும். இந்தக் கிராமங்களை வெள்ளநீர் குறுக்கறுத்துச் செல்வதால் இதுவரை காலமும் போக்குவரத்து இடர்பாடு நிலவிவந்தது.

இந்தநிலையில் புதிய பாலம் அமைக்கப்பட்டு அது மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (ச-75)





## பயிர்களில் நோய்கள் விவசாயிகள் பாதிப்பு

**கிளிநொச்சி, டிசெ. 7**

**நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக கல்மடுக்குளத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக பயிர்ச்செய்கையில் மடிச்சுக்கட்டி, கபில நிறத் தத்தி உள்ளிட்ட நோய்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.**

விவசாயிகள் தெரிவித்ததாவது:

பல ஆயிரம் ரூபா செலவு செய்து கிருமிநாசினிகள் பல தடவைகள் விசிறப்பட்ட போதிலும் பயிர்கள் வளர்ச்சி இல்லாமல் அதேநிலையிலேயே நோய்த்தாக்கம் அதிகரித்த வண்ணமாகக் காணப்படுகின்றன.

தொடர் இழப்புகளால் விவசாயச் செய்கையில் தற்பொழுது வெறுப்பும் சலிப்புத் தன்மையும் ஏற்படுகின்றது.

அத்துடன் அறுவடை செய்த நெல்லினைக்கூட உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது - என்றனர். (ரி-113)

## ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்க

யாழ்ப்பாணம், டிசெ. 7

புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட சைக்கிள் ஒன்று புன்னை நீராவி கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரத்தை சமர்ப்பித்து சைக்கிளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (ச-113)

## கண்ணப்பநாயனார் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 7

சைவவாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவும், கண்ணப்ப நாயனார் குருபூஜையும் தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'தொண்டுசெய்து நாலாரில் கண்ணிடத்து அப்ப வல்லேன் அல்லன்' எனும் விடயப்பொருளில் சைவப் புலவர் செ.த.குமரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

## தரிப்பிடக் குறியீடுகளில் வாகனங்கள் நிறுத்தம்!

### பயணிகள் சிரமம்

சாவகச்சேரி, டிசெ. 7

கைதடிச்சந்தியிலுள்ள பயணிகள் தரிப்பிடக் குறியீட்டுக்குள் கனரக வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கனரக வாகனங்களில் வருவோர் தரிப்பிடக் குறியீடு காணப்படும் பகுதியில் வாகனத்தை நிறுத்திவிட்டு எதிரிலுள்ள கடைகளுக்குச் செல்கின்றனர். இதனால் பயணிகள் அங்கு நிற்பது தெரியாமல் தூர இடங்களுக்கான பேருந்துகள் சென்று விடுகின்றன என பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஒ-9)

## வரதராஜருக்கு ஏகாதசி உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி நண்பகல் 12:05 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாவில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் 108 சங்காபிஷேகமும், காலை 5 மணிக்கு சுவர்க்கவாசல் தரிசனமும் இடம்பெற்று தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு வரதராஜப் பெருமாள் தேரில் ஆரோகணிக்கவுள்ளார். (ச-66,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கும், சிங்கள மாணவர்களுக்கும் இடையே இனதெரியாத சக்திகள் மூட்டிவிட எத்தனித்த முரண்பாட்டுத் தீயை, பொறியியல் பீட மாணவர்கள் மிகச் சரியாகக் கையாண்டு, அதை ஆரம்பத்திலேயே அணைத்துள்ளனர். இம்முறை முதல்முறையாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் 'கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம்' என்ற அநாமதேய அமைப்பின் பெயரில் மின்னஞ்சல்கள் பல தரப்புகளுக்கும் பறக்கத் தொடங்கின. மாவீரர் நாள் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள் என்போரின் ஒளிப்படங்களும் இந்த மின்னஞ்சலில் இணைக்கப்பட்டிருந்தன. நாட்டின் இறைமைக்கு எதிரான நிகழ்வினை நடத்தியவர்களும், அதற்கு அனுமதி வழங்கியவர்களும் தண்டிக்கப்படவேண்டும் எனவும், இல்லாவிட்டால் ஏ-9 வீதியை வழிமறித்து இன்று வியாழக்கிழமை பெரும் போராட்டத்தை நடத்துவோம் எனவும் அந்த அநாமதேய அமைப்பு அறிவித்திருந்தது.

மேலோட்டமாகப் பார்த்தால், கிளிநொச்சி வளாகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள்தான் இவ்வாறு அநாமதேய மின்னஞ்சல்களை அனுப்பி, தமிழ் மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் வஞ்சம் தீர்க்க முனைகின்றனரோ என்ற எண்ணமே ஏற்படும். இதனால் இரு தரப்பும் முரண்பட்டு, சிலவருடங்களுக்கு முன்னர் நடந்தது போல சிங்கள-தமிழ் மாணவர்களுக்கு இடையிலான மோதலாக யாழ்.பல்கலைக்கழகத்தில் வெடிக்குமோ என்ற அச்சமும் ஏற்பட்டிருந்தது. யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்களுக்கு, ஏனைய சிங்கள மக்களைவிடவும், எமது பிரச்சினைகளையும், ஏக்கங்களையும் நேரடியாகப் பார்த்தறியச் சந்தர்ப்பங்கள் அதிகம். அத்தோடு மாவீரர்நாள் நினைவேந்தல் என்பது வன்முறையைத் தூண்டுவதாகவோ, புலிகளை மீளுயிர்ப்புச் செய்வதாகவோ இல்லாமல் மண்ணுக்காக மடிந்தோருக்குச் செய்யும் ஒரு அஞ்சலி என்பதையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்கள் நேரடியாகக்கண்டு கேட்டு உணர்ந்திருப்பார்கள். அப்படி உணர்ந்த பின்னும், இப்படி இனரீதியான முறுகலைத் தூண்டும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களே என்ற கவலையும் பலரிடத்தே ஏற்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கவலைகள் தேவையற்றவை என்பதை யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினர் அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

'மேற்படி அநாமதேய அமைப்புக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அத்தோடு நாங்கள் எவரும் இத்தகைய மறியல் போராட்டம் நடந்தாலும்கூட கலந்துகொள்ளமாட்டோம்' என்று மிகத் தெளிவாக கிளிநொச்சி வளாகத்தில் பயிலும் மாணவர்களின் நிலைப்பாட்டை இந்த அறிக்கை முன்வைத்திருந்தது. இதனால் தமிழ்-சிங்கள மாணவர்களிடையே உருவாக்கப்படவிருந்த குரோதம் தவிர்க்கப்பட்டிருந்தது. ஆனால், இத்துடன் எல்லாமே சுபமாக முடிந்துவிட்டதாக எவரும் நிம்மதியாக இருக்கவும் முடியாது. ஏனெனில் இவ்வாறு அநாமதேயக் கடிதங்களை பல தரப்புகளுக்கும் அனுப்பியவர்கள் ஏதோவொரு மோசமான நிகழ்ச்சிநிரலுக்கு அமையத் தொடர்ந்தும் இருக்கத்தான் போகிறார்கள். அவர்களின் இந்தத் திட்டம் பிசுபிசுத்துவிட்டதால், இனிமேல் புதியதொரு வியூகத்தை வகுக்கவே செய்வர். அதனால் இனிவரும் காலங்களிலும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் விழிப்போடிருக்கவேண்டும். குறிப்பாக பல்கலைக்கழகத்தின் மகுட வாசகமான 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பதைப்போல எல்லாவற்றையும் ஆய்ந்தறிந்து முடிவெடுக்கவேண்டும். விழிப்பே விடிவுக்கான, ஒற்றுமைக்கான முதற்படி.

# அவசியமான பொருள்களுக்கு வற்வரி அறவிடத் தீர்மானம்!

**கொழும்பு, டிசெ. 7**

**குழந்தைகளுக்கான போஷாக்கு உணவு, உரம், மருத்துவ உபகரணங்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகிய வற்றுக்கு வற்வரியை அறவிடுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஏராளமான விவசாயிகள் மீது வற் விதிக்கப்பட்டுள்ளது. மிகச் சிலரே வற்வரியில் இருந்து விலக்குப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு வரி வருவாய் இன்றியமையாதது என்று அரசு கூறுகிறது. ஆனால் வரி விதிப்பில் நியாயம் இருக்கவேண்டும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம் - என்றார். (ம)

# ரணிலுக்கு அழைப்பு

கொழும்பு, டிசெ. 7

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய சம்மேளன கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகே தெரிவித்துள்ளார்.

அவர் எம்முடன் இணைந்து பயணிப்பார் என நம்புகின்றோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எமது கட்சி எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ச-44)

# இலங்கைக்கு பில்கேட்ஸ் ஆதரவு

கொழும்பு, டிசெ. 7



காலநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் இலங்கைக்கு ஆதரவளிப்போம் என்று பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் இணைத் தலைவர் பில் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கோப்-28 மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயத்துறை நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் மற்றும் டிஜிற்றல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் இலங்கையுடன் ஒத்துழைப்பை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார். (ச-இ)

# வேட்பாளர் யார்? அறிவிப்பு தாமதம்

கொழும்பு, டிசெ.7

பொதுஜன பெரமுனவின் சம்மேளனத்தின்போது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென அறிவிக்கப்படமாட்டாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார். பெரமுன கட்சியின் இரண்டாவது தேசிய சம்மேளனம் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பு, சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் அடுத்துவரும் தேர்தல்களை இலக்கு வைத்ததாக அமையும். எனினும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே கட்சியின் வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# டிஜிற்றலில் வந்தது பிறப்புச் சான்றிதழ்

கொழும்பு, டிசெ. 7

முதலாவது டிஜிற்றல் மயமாக்கப்பட்ட தேசிய பிறப்புச் சான்றிதழ் வெளியிடப்பட்டுள்ளது. உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த இதனை வெளியிட்டு வைத்தார். தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்த வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நாளை

08.12.2023

**வெள்ளிக்கிழமை**

**கார்த்திகை - 22** — **ஏகாதசி விரதம்**

சுபநேரம் : 06.17 - 07.47

ராகுகாலம் : 10.47 - 12.17

## நாளொரு நல்வார்த்தை

**என் முயற்சிகள் என்னை பலமுறை கைவிட்டதுண்டு. ஆனால் நான் ஒருமுறைகூட முயற்சியைக் கைவிடவில்லை.**

**– தோமஸ் அல்வா எடிசன் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை பொது அறிவித்தல்

## 2024 ஆம் ஆண்டிற்கான படவரைஞர்களை பதிவு செய்தல்/புதுப்பித்தல்

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கட்டட நிர்மாண அனுமதியினை பெற்றுக் கொள்ளும் முகமாக கட்டட வரைபடத்தினை வரையும் படவரைஞர்களை பதிவு செய்ய / புதுப்பிக்க சபையினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளில் NVQ-Level-05 தகுதியினை பூர்த்தி செய்த பொருத்தமான விண்ணப்பதாரர்கள் 2023.12.25 ஆம் திகதிக்கு முன்னராக சபையுடன் தொடர்பு கொண்டு உரிய பதிவினை மேற்கொள்ளுமாறு / புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2024.01.01ம் திகதி முதல் பதிவு செய்யப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட படவரைஞரால் வரையப்படும் வரைபடங்கள் மாத்திரமே கட்டட அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை**
**2023.12.06**

CR 41141 (AK.1)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், குடில்கள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2024

## (01.01.2024 - 31.12.2024)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2024 ஆம் திகதி முதல் 31.12.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 07.12.2023 - 14.12.2023
( மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 15.12.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 15.12.2023 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் **மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்று முகவரியிட்டு 15.12.2023 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| இல. | விபரம் | கடைகளின் இல. | பிணைப் பணம் | 2024 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | நடமாடும் கடைகள் | | | |
| 01 | முத்திரைச்சந்தை | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 02 | முத்திரைச்சந்தை | இல. 02 | 20,000.00 | 180,000.00 |
| 03 | ஆரிய குளம் | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 04 | துரையப்பா விளையாட்டு அரங்கு | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 05 | பண்ணை கடற்கரை | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 06 | பண்ணை கடற்கரை | இல. 02 | 20,000.00 | 180,000.00 |
| 07 | பண்ணை கடற்கரை | இல. 03 | 20,000.00 | 180,000.00 |
| 08 | சுப்பிரமணியம் பூங்கா | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 09 | பண்ணை மீன்சந்தை | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 10 | பண்ணை மீன்சந்தை | இல. 02 | 20,000.00 | 180,000.00 |
| 11 | நெடுந்தூர பயணிகள் பேரூந்து நிலையம் | இல. 01 | 20,000.00 | 180,000.00 |
| 12 | நெடுந்தூர பயணிகள் பேரூந்து நிலையம் | இல. 02 | 20,000.00 | 180,000.00 |
| 13 | நெடுந்தூர பயணிகள் பேரூந்து நிலையம் | இல. 03 | 20,000.00 | 180,000.00 |
| | பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்வதற்குரிய தள்ளுவண்டில்கள் | | | |
| 14 | தள்ளுவண்டில் | இல. 01 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் | இல. 02 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் | இல. 03 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் | இல. 04 | 20,000.00 | 120,000.00 |
| 18 | தள்ளுவண்டில் | இல. 05 | 20,000.00 | 120,000.00 |
| 19 | தள்ளுவண்டில் | இல. 06 | 20,000.00 | 120,000.00 |
| 20 | தள்ளுவண்டில் | இல. 07 | 20,000.00 | 120,000.00 |
| | நெடுந்தூர பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடில்கள் | | | |
| 21 | குடில் | இல. 01 | | 50,000.00 |
| 22 | குடில் | இல. 02 | | 50,000.00 |
| 23 | குடில் | இல. 03 | | 50,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**யாழ். மாநகர சபை.**

(CR 41148) A 1




# வடக்கு மாகாண பண்பாட்டு விழா

கிளிநொச்சி, டிசெ. 7

வடக்கு மாகாண பண்பாட்டு கலாசார விழா கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுப் புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றது.

கந்தசாமி கோயிலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி பண்டைய கால பண்பாட்டுடன் ஊர்தியில் வீதி ஊடாக கூட்டுற வாளர் மன்றத்தைச் சென்றடைந்து அங்கு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அங்கு தமிழர்களின் பாரம்பரிய பண்டைய கால கலைப் பொருள்கள் காட்சிப்படுத்தலும், புத்தகக் கண்காட்சி என்பனவும் இடம்பெற்றன. (ச-113)

## கடை விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

**077 138 0670**

# முக்கிய அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பூதரார் கோவிலடி (மணியகாரன் வீதி) சுன்னாகத்தைச் சேர்ந்த விக்னராசா கைம்பெண் தங்கப்பிள்ளை ஆகிய நான் எழுதிக்கொள்வது. 04.12.2023 அன்று உதயன் பத்திரிகையில் விளம்பரப் பகுதியில் அடையாளம் இடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய உண்மையை வெளிப்படுத்துகின்றேன்.

எனது தாயார் வழி சீதனமும் தந்தையார் வழி முதுசமும் ஆகிய சொத்துக்களில் பங்குகளில் ஒன்றான இறை நாமம் "அம்பனையிட்டி" இப் பிரசுரம் மூலமாக தெரியப்படுத்த விரும்புகின்றேன். பிரசித்த நொத்தாரிசுகள் முறையே பூ.இளையதம்பியால் எழுதப்பட்ட 34756ம் இலக்க உறுதியில் "அம்பனையிட்டி" என்ற நாமம் காட்டப்பட்டுள்ளது. S.P.சிவஞானம் 1576 எனும் இலக்க உறுதியில் இறை நாமம் "அம்பனையிட்டி" என்று காட்டப்பட்டுள்ளது. பூ.இளையதம்பி இல.35770 என்ற இலக்க உறுதியலும் அம்பனையிட்டி என்ற இறை நாமம் காட்டப்பட்டுள்ளது. அதே நொத்தாரிசால் எழுதப்பட்ட 35686 எனும் இலக்கம் கொண்ட உறுதியிலும் "அம்பனையிட்டி" எனும் இறை நாமம் காட்டப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த வன்னித்தம்பி சின்னத்தங்கச்சியும், சின்னத்தம்பி மகள் சின்னக்குட்டியும், சின்னத்தம்பி சிவசம்பு ஆகியவர்கள் 1ம் பேரின் புத்திரியும், 2ம், 3ம் பேரின் சகோதரியும் ஆகிய அவ்வூர் அம்பலவாணர் வேலுப்பிள்ளை பெண் ஐயாத்தைப்பிள்ளைக்கு சீதனம் கொடுக்கப்பட்டுள்ளது நொத்தாரிசு இ.பொன்னம்பலம் 6406 எனும் இலக்கம் கொண்ட உறுதியாலும் "அம்பனையிட்டி" என்ற நாமம் காட்டப்பட்டுள்ளது. T.குமாரசாமி என்ற நொத்தாரிசால் 1954ம் ஆண்டு சித்திரை மாதம் 30ம் திகதி 2803 என்ற இலக்க உறுதியில் அம்பனையிட்டி என்று காட்டப்பட்டுள்ளது. அதன் முற்பதிவானது H280/155 ஆகும்.

J/207 கிராம சேவகர் பிரிவில் காணிகளின் நாமங்கள் பற்பல உள்ளன. அதே சமயத்தில் அம்பன்சிட்டி என்ற இறை நாமம் கொண்ட காணி எமது கிராமசேவகர் பிரிவில் இல்லை.

பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராசா அவர்களால் 10214 இலக்கம் கொண்ட உறுதியில் அம்பன்சிட்டி என்று காட்டப்பட்டுள்ளது. அதே அம்பன் சிட்டி என்ற நாமம் கொண்ட காணியை அதே நொத்தாரிசால் அம்பலசிட்டி இறை நாமம் காட்டி 10459 இலக்க உறுதி மூலம் முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் நந்தகுமார் முறைகேடான முறையில் தனக்கென வெளிப்படுத்திக்கொண்டுள்ளார்.

நொத்தாரிசு லிங்கா துரைராசாவால் 10214 இலக்கம் கொண்ட உறுதியில் காட்டப்பட்டவாறு நிலஅளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களால் வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் இலக்கமானது 4110. இந்த வரைபடத்தில் அம்பன்சிட்டி என இறை நாமம் காட்டப்பட்டுள்ளது. 19.11.2016ம் ஆண்டு வரைந்த வரைபடம் ஆகும். மேற்குறிப்பிட்ட உறுதி இலக்கத்தைக் கொண்ட அதே நொத்தாரிசினால் 10459 என்ற இலக்க உறுதி வெளிப்படுத்திக்கொள்ளும் போது நிலஅளவையாளர் சிற்றம்பலத்தின் வரைபடம் காட்டப்படாமல் அப்படத்திலும் அம்பன்சிட்டி என்ற இறை நாமமே காட்டப்பட்டுள்ளது. நொத்தாரிசு சுதா கயேந்திரக்குமாரால் இல.5387 ஆக எழுதப்பட்ட உறுதியில் ம.சிற்றம்பலம் அவர்களின் வரைபட இல.4110 காட்டப்பட்டும் அம்பலசிட்டி என்ற இறை நாமத்தைப் பாவித்து சின்னத்துரை அருந்தவராசாவுக்கு அறுதி உறுதியினை வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார். முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் நந்தகுமார்.

ஆகவே 10214 இலக்கம் கொண்ட உறுதியின் இறை நாமம் அம்பன்சிட்டி எனும் காணி எமது கிராமத்திலும் எமது வட்டாரங்களிலும் இல்லை என்பதை வெளிப் படுத்துகின்றேன்.

ஆகவே தர்மலிங்கம் நந்தகுமார் முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்தவருமாகிய அவரின் அறிவித்தலுக்கு அமைய இவ்வறிவுறுத்தலை கொடுக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது. போலியான இறை நாமம் கொண்ட அம்பன் சிட்டியாக எழுதப்பட்டவை அனைத்தும் அம்பலசிட்டியாக எழுதப்பட்ட அதனையும் யாரும் கொள்முதல் செய்ய வேண்டாம் என்று தகவல் தருவதோடு யாழ். மாவட்ட மல்லாக நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 1226/23 இதன் வழக்காளி நானே ஆவேன்.

**வி.தங்கப்பிள்ளை**

(cs.53006) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராயில் பிளாஸ்ரிக் கழிவகற்றல்!

யாழ்ப்பாணம், டிசெ. 7
உலக மண் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் உரும்பிராய் உபஅலுவலகத்தின் ஏற்பாட்டில் 'பிளாஸ்ரிக் கழிவுகளகற்றி பசுமையான, அழகான பிரதேசத்தைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது உரும்பிராய்ச் சந்திவரை விழிப்புணர்வு நடைபயணமும் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன தரம் பிரிக்கப்பட்டு அகற்றப்பட்டன. (ச-66)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## PHYSICAL EDUCATION UNIT
## WALK -IN – INTERVIEW

Walk in interview for the recruitment of the Visiting Coaches for the following fields will be held on 20.12.2023 **at 10.00 a.m** at the Board Room of the University of Jaffna.

**Jaffna**

Visiting Coaches in Chess- Men / Chess- Women / Karate / Rugby/ Wrestling

**Kilinochchi Premises**

Visiting Coaches in Badminton /Carrom/ Chess / Karate / Netball / Table Tennis/ Taekwondo/ Volleyball / Weightlifting

**Qualification**

a) A graduate of a recognized university who has been a member of a National Team / National Champion or other equivalent attainments in the field of sports with the prior approval of the UGC

OR

b) A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

OR

c) G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05) years experience in organizing and implementing sports programmes.

| Post | Salary |
|---|---|
| Visiting Coach | Rs. 750/- per hour |

Note: - This appointment will be 1½ hours per day and two days per week. Total hours of Appointment will be 1½ hours x 2 days x 4 weeks x 10 months = 120 hours.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview with relevant certificates, NIC and **self-prepared application.** Copy of the relevant certificates and NIC should be attached with the self-prepared application.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
06.12.2023

(cr41146 (N-1)

## மரண அறிவித்தல்



### செல்வி இராஜராஜேஸ்வரி பேரம்பலம்
**(பேரம்பலம் ரீச்சர்)**
(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை)

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராஜராஜேஸ்வரி பேரம்பலம் நேற்று (06.12.2023) புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் முத்தாச்சி தம்பதிகளின் மகளும், தனபாக்கியவதி, காலஞ்சென்றவர்களான சோமசேகரம், விமலாதேவி, இராஜராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாயகி, இரத்தினேஸ்வரி, காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம், இலக்குமணேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், வேணுகுமாரன், கணேசகுமாரன், ஷாந்தகுமார் மற்றும் காலஞ்சென்ற திரியம்பகி ஆகியோரது பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
077 432 0481 / 077 436 4523

(cs 53095) (CS) N-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
10 . 09 . 1938



ஸ்ரீசித்திரவேலாயுதப் பெருமான் திருவடியில்
04 . 12 . 2023

### சபாபதி இராசரத்தினம் ஐயர்
(அச்சுவேலி வடக்கு (சரசாளி) அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தானத்தின் பரம்பரை தாபரிப்பாளரும், பூசகரும்)

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் அச்சுவேலி வடக்கு (சரசாளி - அருள்மிகு ஸ்ரீ சித்தரவேலாயுதர் தேவஸ்தானத்தின் பரம்பரை தாபரிப்பாளரும், பூசகருமாகிய சபாபதி இராசரத்தினம் ஐயர் அவர்கள் கடந்த (04.12.2023) திங்கட்கிழமை ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - கதிராசி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வராசு, விக்கினேஸ்வரி, சரஸ்வதி, வரதராசா (பிரான்ஸ்) மற்றும் புஸ்பராணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், தம்பிராசா, மகாலிங்கம் மற்றும் சிவராஜா (ஓய்வுபெற்ற ஆண் தாதி), சறோஜா (பிரான்ஸ்), பூமணி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற செல்வநாதனின் சகலனும், சறோஜாதேவி, நித்தியானந்தம் (பிரான்ஸ்), அசோகாதேவி, நித்தியரூபன் (பிரான்ஸ்), நித்தியகஜேந்திரன் ஐயர் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுபாஸ், வளர்மதி (பிரான்ஸ்), விஜயமோகனராசா (மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் - யாழ்ப்பாணம்), மகாலட்சுமி (பிரான்ஸ்), விசிந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்வண்ணா (பிரான்ஸ்), திவ்வியன், லக்சிகன் (சப்பிரகமுவா பல்கலைக்கழக - மாணவன்), சுவந்தன் (பிரான்ஸ்), சுவர்ணா (பிரான்ஸ்), சுவீனா (பிரான்ஸ்), அமுதாஞ்சலி (பிரான்ஸ்), ஜினோஜினி, பிறநிதா ஆகியோரின் அன்புப் பேரனும், காரினியின் (பிரான்ஸ்), அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுவேலி வடக்கு,**
**அச்சுவேலி.**
(cs 24132) (N.1)

தகவல்: **குடும்பத்தினர்**
077 522 4995

## கறுவா விலை வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 7
சந்தையில் கறுவாவிலை குறைவடைந்துள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அல்பா கறுவாப் பட்டை இலங்கை கறுவா சந்தையில் கிடைக்கும் மிக உயர்ந்த தரமாகும். ஒரு கிலோகிராம் அல்பா கறுவா 4 ஆயிரத்து 800 ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது சந்தையில் 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டது. (ச-இ)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
## படவரைஞர்களை பதிவு செய்தல் - 2024

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள்) கீழ்வரும் விடயங்களினை கருத்திற்கொண்டு உரிய ஆவணங்களுடன் 07.12.2023ஆம் திகதி தொடக்கம் 29.12.2023ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
* 29.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை புதுப்பிக்க தவறும் படவரைஞர்கள் தாமத கட்டணமாக ரூபா 1000.00 .னை செலுத்திக்கொள்ளுதல் வேண்டும்.
* வலிகாமம் கிழக்கு பிரதேசசபையில் பதிவு செய்ய தவறிய அல்லது புதுப்பிக்க தவறிய எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேசசபையில் 2024 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

**குறிப்பு:-**


* படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவக் கட்டணம் - ரூபா 1000.00
* உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு படவரைஞராக புதிதாக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 3000.00
* உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு படவரைஞராக பதிவினை புதுப்பித்துக் கொள்வதற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 2000.00

07.12.2023

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர் 0212058867**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 ஆம் ஆண்டு நினைவுச்சுடர்



தோற்றம் 09 - 11 - 1956

மறைவு 05 - 12 - 2015

## அமரர் கிட்டினர் நாகராசா

திதி: அபரபக்கதசமி

எங்கள் அன்புத் தெய்வம் அப்பாவே!
நொடிப்பொழுதில் எமை
நோகவிட்டு சென்றுவிட்டீர்கள்...

சுவாசிக்க சுவாசம் இல்லை நேசிக்க யாரும் இல்லை
நெஞ்சம் எல்லாம் வலிகளுடன் நிஜங்களைத் தேடுகின்றோம்
நிஜம் தானா என்று எண்ணி நித்தமும் தவிக்கின்றோம் அப்பா!

வானில் சிந்திடும் துளியில் மண்ணில் பயிர்கள் துளிர்விடும்
எங்கள் விழிகள் சிந்திடும் துளியின் வழியில்
உங்களை கண்டிட முடியாதோ...

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் என்றென்றும் நிறைந்திருக்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்...

கைதடி நாவற்குழி,
கைதடி.

குடும்பத்தினர்
077 720 1615

(CS 27301)A-1

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி – பழையமாணவர் சங்கம்
பெருமையுடன் வழங்கும்



09/12 2023
மாலை 5 மணி முதல்

## முத்தமிழ் மாலை 2023



நர்த்தன சேத்திராவின்
"அன்பே சிவம்" நாட்டிய நடனம்

குமாரசாமி மண்டபம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இரவு போசனத்துடனான கலை நிகழ்வு

www.jhcobajaffna.com | 076 125 6655

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 10 . 1948

மறைவு 05 . 12 . 2023

### திருமதி சறோஜினி சுந்தரலிங்கம் (சறோ)

(ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர், இலங்கை மின்சார சபை)

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சறோ என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சறோஜினி சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர், இலங்கை மின்சார சபை) கடந்த (05.12.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் (பொறியியலாளர், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், உதயணன் (கனடா), துளசி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமலதா (கனடா), சிவசங்கர் (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (சிற்று), வரதராசன் (வரதன்) மற்றும் சந்திராதேவி (சந்திரா), ஜெகசோதி (சோதி), வசந்தா, ரகுநாத் (ரகு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இந்திரா, ஜெகசோதி, இராசலட்சுமி மற்றும் துரைசிங்கம், பத்மநாதன், புஸ்பலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், தர்மிகா, சைந்தவி, நிருஷயன், சிவநயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2023) வெள்ளிக்கிழமை 150, நெடுங்குளம் வீதி, அரியாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப 2.30 மணியளவில் அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6414 115

(CS 27304) A-1

---

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 05 . 1947

மறைவு 06 . 12 . 2023

### இராசரத்தினம் அன்னலட்சுமி

காரைநகர் நட்டுபாளி கோவளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் அன்னலட்சுமி (அன்னம்) நேற்று (06.12.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்க ளான அம்பலவாணர் கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சுந்தராம்பாள் (குஞ்சு) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுந்தரரேஸ் வரனின் (சுந்தரம்) அன்பு மாமியாரும் திலக்ஷி (சிந்து - கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்) - டிசாந்தன் (பிரான்ஸ்) அருள்குமரன் (பிரான்ஸ்), கஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, சபாரத்தினம், பரஞ்சோதி மற்றும் கமலாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அரிச்சந்திரன், பாலாமணி, காமாட்சி, சிவபாதம், அன்ன லட்சுமி மற்றும் கமலாதேவி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 547, மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தில் உள்ள அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

547, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர், மகள் (குஞ்சு)
TP:0771006870

(CS 27300) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JR for 2024

"சுதந்திரமடைந்து 75 வருடங்களின் பின்னர் குடும்ப அரசியல் இலங்கை மக்களையும் நாட்டையும் பொருளாதார ரீதியாக சீரழித்துள்ளது. அனைத்து குடிமக்களுக்கும் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியவற்றை அடையக்கூடிய ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான திட்டங்களை வகுத்து செயல்படுத்த வேண்டியது அவசியம். கூடுதலாக, எங்கள் வளங்களை சரியாக நிர்வகிப்பது முக்கியம். ஊழலற்ற தூய்மையான பொது நிர்வாகத்தை ஏற்படுத்த அனைத்து தேசபக்தர்களுக்கும் இது ஒரு அழைப்பாக அமைகிறது.

நாட்டின் வருவாயை உயர்த்துவதும், ஊழலில் இருந்து விடுபட்டு அனைத்து குடிமக்களின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்தும் வகையில் நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டங்களின் மூலம் தனிப்பட்ட பொருளாதார வளர்ச்சியை அடைவதும் நமக்கு அவசரமாகத் தேவை. இந்த இலக்கை அடைவது சாத்தியமற்றது அல்ல இருப்பினும், இது அனைத்து குடிமக்களின் ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் கோருகிறது. தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் திட்டமிடலைத் தொடங்குவதற்கும் இப்போது நேரம் வந்துவிட்டது.

**இன்னும் குறைந்த காலமே எஞ்சியிருப்பதால் என்னுடன் சேர உங்களை அழைக்கிறேன்."**



## ஜனக ரத்நாயக்க



සුසමාදර්ශය පදනම

**Paradigm Shift Foundation**

**Trillium Tower**

38. சோமாதேவி இடம். கிருலப்பன அவென்யூ, கொழும்பு 05.

**www.paradigmshift.lk**

**0712 722 777**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் மண் தினம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

சர்வதேச மண் தினத்தை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேசசபைக்குட் பட்ட பகுதியில் இருவேறு செயற்பாடுகள் பிரதேசசபைச் செயலாளர் சுதர்சன் தலைமையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன பங்கேற்றார்.

அதேவேளை வலி. வடக்குப் பிரதேசசபைக்குட்பட்ட பலாலி வீதி யோரங்களிலுள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் சேகரிப்பு நடவடிக்கையும் இடம்பெற்றது. (ச-27)



ஊரியான் - தட்டுவன்கொட்டியில்

# பாதையின்மையால் விவசாயிகள் அவதி

**கிளிநொச்சி, டிசெ. 7**

**கிளிநொச்சி - ஊரியான் - தட்டுவன்கொட்டிப் பகுதியில் கமத்துக்கு ஏற்ற பாதை இல்லாமையால் பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

பலநூறு ஏக்கரில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இந்தப் பகுதியில், விவசாயிகள் தம் விளைநிலங்களுக்குத் தேவையான உரங்கள், கிருமிநாசினிகளை எடுத்துச் செல்லவும், விளைபொருள்களை சந்தைப்படுத்துவதற்காகக் கொண்டு செல்லவும் உரிய தொரு வீதி இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மழைகாலங்களில் வெள்ளநீர் நீண்டதூரத்துக்குத் தேங்கியிருக்கும் வீதி வழியாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் விவசாயிகள் பயன்படுத்தும் வாகனங்கள் பெரும் சேதமடைவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். (ம)



## மரண அறிவித்தல்

### கதிர்காமநாதன் தர்மபூபதி

சங்கத்தானையை பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் தர்மபூபதி அவர்கள் நேற்று (06.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2023) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41150) A-1

## மரண அறிவித்தல்

மலர்வு
28
04
1939



உதிர்வு
06
12
2023

### பொன்னுத்துரை மகேசலிங்கம்
(கட்டட ஒப்பந்தக்காரர்)

826/14, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை மகேசலிங்கம் (கட்டட ஒப்பந்தக்காரர்) அவர்கள் நேற்று (06.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (முன்னைநாள் வர்த்தகர், தட்டாதெரு) -பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், கமலாதேவியின் கணவரும், தர்சினியின் (அதிபர் பயிற்சியாளர், யாழ். டிறிபேக் கல்லூரி) அன்புத்தந்தையும், சுதாகரனின் (உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர், இ.போ.ச, வடமாகாணம்) மாமனாரும், காலஞ்சென்ற இந்திராணி, ஆனந்தலிங்கம் (முன்னாள் சாலைப் பரிசோதகர், இ.போ.ச), (நியூசிலாந்து), சந்திரலிங்கம், புஸ்பராணி, யோகராணி, அற்புதராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும், யதிஷா (2ம் வருட மாணவி, மொறட்டுவ பல்கலைக்கழகம்), டிவாகன் (உயர்தர மாணவன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனும், புஸ்பராணி, கனகம்மா, சண்முகசுந்தரம் (யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை முன்னாள் செயலாளர்) ஆகியோரின் மைத்துனரும், சதீஸ் - பிரேமிளா (லண்டன்), குமரேஸ் - நித்தியா (லண்டன்), வித்தியா - யாதவன் (நியூசிலாந்து), ஸ்ரீஜனனி - கபிலன் (வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பெரியப்பாவும், சிந்துஜா விக்னேஸ்வரன் (வைத்தியர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை), நிரூஜா றமேஸ் (உத்தியோகத்தர், இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பெரிய மாமனாரும், துஷான், அட்ஷயா, கனுஷான், நிஷாலி, ஜஸ்வின், யுவின், அட்சயா,- அம்சயன், டஸ்விகா, கவிநயா ஆகியோரின் பெரிய தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2023) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 826/14,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 021 222 1521

(CS37305) S-1

## மரண அறிவித்தல்



### யோசேப் அருளானந்தம்

46/2, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நீண்டகாலம் வசித்தவரும் தற்போது அம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான யோசேப் அருளானந்தம் நேற்று (06.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாட்டுக்கூத்து கலாநிதி ம. பூந்தான் யோசேப் எஸ்தர் அம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை, றோசம்மா, அந்தோனிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் இளைய சகோதரரும், சிதம்பரம்பிள்ளை பூங்காவனம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் பாசமிகு கணவரும், அருள்செல்வன் (சட்டத்தரணி), ஆனந்தசெல்வன் (அமெரிக்கா), காலஞ்சென்ற கலைச்செல்வன் (முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி வனிதா அருள்செல்வன் (தாதி-யாழ். போதனா வைத்தியசாலை), சகுந்தலா (அமெரிக்கா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கு.ஜெயராணி, ம.இன்பராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான கு.குப்புசாமி, பி.மரியநாயகம் ஆகியோரின் சகலனும், அ.பிருந்திகா, அ.நிறோஷிகா, அ.பானுகா, ஆ.எமோசஸ்வின் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேரனும், கு.ஜெயபாலன் (இந்தியா), கு.விஷ்னுபாலன் (இந்தியா), ர.மதுராகினி ஆகியோரின் சித்தப்பாவும், ம.அபராஜிதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ம.அனபாயன், ந.மைதிலி (கனடா), ஜெ.மஞ்சுபாஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், அம்மன் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த கமலநாதன் - சரஸ்வதி தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2023) வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் திருநெல்வேலியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
அ.அருள்செல்வன் (மகன்)
(சட்டத்தரணி)

(CS 27303) A-1

## பாதயாத்திரை

இலங்கை தேசிய சைவமகாசபையின் பத்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு சிவ சங்கம நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வருடாந்த திருவெம்பாவைக் கால ஈழத்துச் சிதம்பர பாத யாத்திரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தில் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.

அதேவேளை, இளம் சிவதொண்டர் வதிவிடப் பயிற்சிப் பாசறை எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 25 ஆம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'அன்பே சிவம்' இதழ் வெளியீடும், இளம் சிவதொண்டர் கௌரவிப்பும், அறக்கொடையாளர் மதிப்பளிப்பும் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு யாழில் இடம்பெறும். (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த சின்னங்கள் வடக்கில் அழிப்பாம்!

## கண்ணீர் வடிக்கிறார் வீரசேகர



கொழும்பு, டிசெ.7

வடக்கு - கிழக்கில் பௌத்த புராதன சின்னங்கள் வேகமாக அழிக்கப்பட்டுவருகின்றன. அவ்வாறு இருக்கையில் வடக்கு - கிழக்கு பிரிந்தால் நிலைமை என்னவாகும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பௌத்த சாசனத்தைக் காக்க வேண்டுமெனில் நாட்டில் ஒற்றையாட்சி பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில் தற்போது வடக்கு - கிழக்கில் பௌத்த தொல்பொருள்கள், புராதன சின்னங்கள் வேகமாக அழிக்கப்படுகின்றன. குருந்தூர்மலை விவகாரம் இதற்குச் சிறந்த சான்று. நெடுங்கேணியில் இருந்த பௌத்த சின்னம் அகற்றப்பட்டு வேறொரு சிலை அங்கு வைக்கப்பட்டதையும் நான் கண்டேன். இந்த நிலைமையில் வடக்கு - கிழக்கு பிரிந்தாலோ, தனி நாடு உருவாகினாலோ என்ன நடக்கும்? எனவே ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டியது மிக முக்கியமானது - என்றார். (அ-எ-44)

# இராணுவச் சிப்பாய்க்கு இரட்டை தூக்குத் தண்டனை

யாழ்ப்பாணம், டிசெ.7

படைமுகாமில் துப்பாக்கிச் சூடு நடத்தி இராணுவத்தினர் இருவரைக் கொலை செய்தமை மற்றும் ஒருவருக்குப் படுகாயம் ஏற்படுத்தியமைக்காக இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு இரட்டைத் தூக்குத்தண்டனை மற்றும் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது மன்னார் மேல் நீதிமன்றம்.

நேற்று இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டபோது மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.மொஹமட் மிஹால் இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி முருங்கன் படைமுகாமில் பணியாற்றிய வணசிங்க நிமலசிறி டி சில்வா என்ற படைச் சிப்பாய் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இராணுவத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார். மன்னார் நீதிவான்நீதிமன்றில்சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் எதிரி மீது இரட்டை ஆள்கொலை மற்றும் ஆபத்தான காயம் விளைவித்தமை என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து நீதிவான் விளம்பல் கட்டளை வழங்கினார். சட்டமா அதிபர் திணைக்களத்தால் மன்னார் மேல் நீதிமன்றில் குற்றப்பகர்வு பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றப்பத்திரிகை மீதான விளக்கம் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுத் தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டிருந்தது. வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி அரச சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

"எதிரி மீதான மூன்று குற்றச்சாட்டுகளும் சிவில் சாட்சியங்கள் மற்றும் நிபுணத்துவ சாட்சியங்களின் அடிப்படையில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநரினால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவரை குற்றவாளியாக மன்று தீர்ப்பளிக்கின்றது" என்று மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (எ-26)

## ஞாயிறும் நாடாளுமன்று

கொழும்பு, டிசெ.7

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் நாடாளுமன்றம் கூடவுள்ளது.

வற்வரியை 15 வீதத்தில் இருந்து 18 வீதம்வரை அதிகரிப்பதற்கான யோசனை தொடர்பில் விவாதிக்கவே நாடாளுமன்றம் கூடவுள்ளது. (எ-44)

## கொடுப்பனவு

சாவகச்சேரி டிசெ. 7

தென்மராட்சிப் பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் உதவிக் கொடுப்பனவுகள் நேற்றுப் புதன்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

முதியோர் கொடுப்பனவு, நோய்களுக்கான கொடுப்பனவு மற்றும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. அவற்றை 15 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-9)

### தமிழ்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதிகளை நினைவுகூரவே மாவீரர் தினம் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆதரவு வழங்கியுள்ளனர். நாட்டைப் பிளவுபடுத்தவே பயங்கரவாதிகள் முற்பட்டனர். படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட நாம் விரும்பவில்லை. தமிழர்களும் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

யாழ். கோப்பாயில் சிறார்களுக்குப் புலிகளின் சீருடை அணிவிக்கப்பட்டு, கழுத்தில் சயனைட்டும் மாற்றப்பட்டு நிகழ்வில் பங்கேற்க வைக்கப்பட்டுள்ளனர். சிங்கள மக்கள் தொடர்பில் சிறார்களுக்கு சிறுவயதில் இருந்தே குரோதத்தையும், வைராக்கியத்தையும் விதைத்து வருகின்றனர்.

ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம். ஈழம் அமைவதற்கு உடலில் உயிர் உள்ளவரை, தேசப்பற்றுள்ள மக்கள் வாழும் வரை ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது.

நாட்டில் மீண்டும் போர் ஏற்பட்டால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு இடமளிக்கமாட்டோம். அவர்களின் குடும்பத்தை போர் நடக்கும் இடத்துக்கு அனுப்ப வேண்டும் என யோசனையை முன்வைக்கின்றேன் - என்றார். (அ-எ-44)

### தெல்லிப்பழை...

மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இளைஞர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ஒருவர் காயமடைந்திருந்தார். தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களைத் துரத்திச் சென்று பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியபோதும், அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேனன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலானகுழுவினர்விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்களை கிளிநொச்சிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர். முகங்கள் மறைக்கப் பயன்படுத்திய துணிகள் மற்றும் இரு வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

6 மாதங்களின் முன்னர் வினோதன் என்பவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹை -ஏஸ் வாகனத்தில் இருந்த துப்பாக்கிச் சூட்டு அடையாளங்களை மறைக்கவும், பாகங்களை மாற்றவும் முயன்றுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள மூவரைக் கைது செய்யும்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், கைது செய்யப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-23)

### சிங்கள...

துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தமிழர்களின் இன விகிதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. சில அதிகாரிகளும் இதற்குத் துணை நிற்கின்றனர்.

வடக்கிலுள்ள காணியை தொல்பொருள் திணைக்களமோ, ஏனைய தரப்புகளோ அபகரிக்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரதேச செயலாளரின் அனுமதி இன்றி, காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்கில் இருக்கின்ற காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு அக்கறை காட்டவில்லை. காணி அதிகாரம் தொடர்பில் விசேட செயற்றிட்டத்தை காணி அமைச்சு உருவாக்கவேண்டும். எங்களுக்கு சிங்கள, பௌத்த மக்களிடம் எதிர்ப்பு, காழ்ப்புணர்ச்சி இல்லை. எமது நிலத்தில் ஆக்கிரமிப்புகளை நிறுத்துங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-44)

### நால்வர்...

உதவியாளர் சென்றபோது, நால்வர் தகராறில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேசசெயலருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-125)

### வன்முறைகளுக்கு...

டத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள். யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்வன்முறைச்சம்பவங்களுடன்தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

தெல்லிப்பழையில் இடம்பெற்றதைப் போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவதை அனுமதிக்கமுடியாது. சம்பவத்துடன் தொடர்புடையவர்களை 48 மணி நேரத்துக்குள் யாழ்.மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரும், ஏனைய பொலிஸ் பிரிவினரும் இணைந்து சந்தேகநபர்களைக் கைது செய்ததுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்இடம்பெறும்வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படுவோர் பொலிஸாரால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கூலிக்கு அமர்த்தி வன்முறைச் சம்பவங்கள் நடத்தப்படுவதை அனுமதிக்கமுடியாது. பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ-26)

### சிறுமி...

சிறுமியின் தகவலுக்கு அமைய சிறுமியின் தாய் கடந்த 4ஆம் திகதி செய்த பொலிஸ் முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுமியின் தந்தை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி மருத்துவப் பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஐயன்கன்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-19)

### 'எட்கா'...

மாதம் முதலாம் திகதிவரை கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

அதில் ஏற்புடைய பல துறைகள் தொடர்பாக இருதரப்பு செயற்பாட்டுக் குழு உடன்பாடுகளை எட்டியுள்ளது. இந்த உத்தேச ஒப்பந்தத்தின் 13 ஆவது சுற்றுக் கலந்துரையாடலை அடுத்தாண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை இந்தியாவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### நாடாளுமன்ற...

மற்றும் கோபா குழுக்கள் கலைக்கப்பட்டு புதிய குழுக்களை நியமிக்க நேரும்.

தற்போது சர்ச்சைக்குள்ளாகியுள்ள கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார ரவை பதவி நீக்கி, புதியவர் ஒருவரை அந்தப் பதவிக்கு உள்வாங்குவதும், ஜனாதிபதியின் இந்த திட்டத்தின் ஒரு நோக்கமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து, இந்த ஆண்டுக்கான வலய, மாகாண மற்றும் தேசிய ரீதியான போட்டிகளில் பங்கேற்று சாதனை படைத்த மற்றும் கணித விஞ்ஞானத் துறையில் சாதித்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலாநிதி அ.ஜெய்கீசன் கலந்து கொண்டார். (ச-75)



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மீனவர் தின நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கடற்றொழில் மற்றும் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் விசுவலிங்கம் கலிஸ்ரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (ம)




உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, உடற்கல்வி கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் நிறுவுநர் முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பழைய மாணவர்களால் கௌரவிக்கப்பட்டார். (ச-125)



கிரிசலிஸ் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் 250 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பச்சிலைப்பள்ளி உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ரி-75)

**காணி விற்பனைக்கு**

யாழ். மானிப்பாய் வீதி ஓரமாக ஆறுகால் மடத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (உறுதிக்காணி)

**075 9444 601**



## அறநெறி மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சி

முல்லைத்தீவு, டிசெ. 7

முல்லைத்தீவு இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான அடிப்படைத் தலைமைத்துவப் பயிற்சி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்டது. மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வியமைச்சின் ஓய்வுநிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராசா, சைவப்புலவர் பாலன் சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-75)

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

**வேலையாட்கள் தேவை**

ஊர்காவற்துறையில் உள்ள பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் தேவை.

வேலைநேரம் : 7.00 am - 5.30 pm
ஆரம்ப சம்பளம் : 75000/= - 105000/=

காரைநகரில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு கொள்ள :
**077 067 4452**



பச்சிலைப்பள்ளி செயலக பிரிவின் சோரன்பற்று கிராமஅலுவலர் பிரிவில் வள்ளலார் அருட்சோதி மன்றத்தின் பிரான்ஸ் கிளையினரின் ஏற்பாட்டில் நலிவுற்ற குடும்பங்களுக்கு கடந்த வாரம் உலர் உணவுப்பொதி வழங்கப்பட்டது (ரி-75)

**காணி விற்பனைக்கு**

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.

திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
**077 814 7389,077 986 5457**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org